## 13

# நிறைவான எதிர்காலம்

## [வெளிப்படுத்தின விசேஷம் 21 & 22]

*இந்த அண்டம் மற்றும் காலம் ஆகியவற்றின் படைப்பு பற்றிய ஆதியாகமத்தின் விபரங்களுடன் நமது படிப்பு தொடங்கிற்று. "பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார்" (ஆதியாகமம் 1:14). வேதாகமத்தின்படி, காலம் என்பது ஒரு தொடக்கத்தைக் கொண்டிருந்தது; மற்றும் வேதாகமத்தின்படி, அது ஒரு முடிவையும் கொண்டிருக்கும். சில மதங்களில் காலத்தைப் பற்றிய கண்ணோட்டத்தைப் போலின்றி, வேதாகமரீதியான கண்ணோட்டமானது காலம் என்பது நீள்கோட்டு அளவையைக் கொண்டதாக உள்ளது, அதாவது இது (காலம்) ஒரு தொடக்கத்தையும் ஒரு முடிவையும் கொண்டதாக "அ என்ற புள்ளியில்" இருந்து "ஆ என்ற புள்ளிக்கு" நகருகிறது. காலமும் பொருளும் முறையான காலகட்டத்தில் "மறு உருவாக்கப்" படுகின்றன என்ற கருத்தில் அவை வட்டச் சுழற்சி கொண்டவைகளாக இருப்பதில்லை. அதற்குப் பதிலாக, உலகம் பற்றி வேதாகம எழுத்தாளர்களின் சீர்பொருத்தமான கண்ணோட்டம் ஒரு "காலமுடிவு" உலகக் கண்ணோட்டமாக - காலம் என்பது முடிவாக மாத்திரமே அல்ல, ஆனால் அது மாபெரும் பேரழிவுடன் முடியும் என்பதாக - உள்ளது.*

*இயேசு திரும்பி வரும்போது அந்த கடைசிக் கணம் வரும். பின்பு பௌதீகரீயான இந்த அண்டம் அழிக்கப்பட்டு, நாம் நித்தியத்தில் இருப்பதன் ஒரு புதிய வளர்ச்சிப்படியைத் தொடங்குவோம். 2 பேதுரு 3:3-10ல், "அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே" (வசனம் 4) என்ற சில அவநம்பிக்கையாளர்களின் குற்றச்சாட்டிற்குப் பேதுரு பதில் அளித்தார். வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், முடிவு வரும் என்பதை நினைவூட்டி, அவர் மீண்டும் ஒருமுறை, இதை அழிப்பார் - இம்முறை அக்கினியால் அழிப்பார் - என்று கூறினார். (ஆதியாகமம் 6; 7) பின்பு அவர் தமது வாசகர்களுக்கு, "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்" என்று நினைவூட்டினார் (வசனம் 9). தேவனைப் பொறுத்த மட்டில் காலம் என்பது பொருத்தமற்றதாக உள்ளது; அவர் அதனால் கட்டுப்படுத்தப் பட்டிருப்பது இல்லை. அடுத்ததாகப் பேதுரு பின்வரும் கூற்றை உரைத்தார்: "கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (3:10). "காலத்தின் முடிவு" ஒன்று வந்துகொண்டிருக்கிறது.*

*இதே சத்தியத்தை மத்தேயு 24:36-44ல் இயேசு உறுதிப்படுத்தினார், அவர் தமது வருகையின் நாளையோ அல்லது நேரத்தையோ "எவரொருவரும் அறியார்" என்று வலியுறுத்தினார். "விழிப்புடன் இருந்து" ஆயத்தமாக இருத்தல் என்பது நமது பொறுப்பாக உள்ளது என்று அவர் கூறினார்: "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" (24:44). அவரது வருகையின் காலத்தை முன்னுரைத்தல் சாத்தியமற்றதாக உள்ளது (ஆகையால், நாம் அதை முயற்சி செய்வது தவறாக உள்ளது); ஆனால் அதற்காகத் தயாராக இருத்தல் சாத்தியமானதாக உள்ளது, அதுவே நம் ஒவ்வொருவரின் பொறுப்பாக உள்ளது.*

*"ஆனால், எல்லாப் பொருள்களும் அழிக்கப்பட இருக்கின்றன என்றால், தேவனுடைய மக்களுக்கு எதிர்காலத்தில் வைக்கப்பட்டுள்ளது என்ன?" என்று சிலர் கேட்கலாம். அந்தக் கேள்விக்குத் திட்டவட்டமான பதிலை நமக்குத் தராமல் வேதாகமம் முடிவடைவதில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் "நிறைவான எதிர்காலத்தை" - எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்பதை மாத்திரம் இன்றி, காலம் என்பது இனியும் இல்லாது, நித்தியத்தில், என்ன நடக்கும் என்பதையும் - நமக்கு விவரிக்கின்றன. இந்த இரண்டு அதிகாரங்களில் யோவான், அந்த எதிர்காலத்தைப் பற்றி விவரிக்கப் பலவிதமான உருவகங்களைப் பயன்படுத்தினார். அவர் "புதிய வானம் மற்றும் புதிய பூமி," "புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்," ஒரு "மணவாட்டி" ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள், வேதவசனங்களில் கண்டறியப்பட வேண்டிய, பரலோகத்தைப் பற்றிய மிகமுழுமையான விவரிப்பை அளிக்கின்றன. வேதாகமம் இவ்வாறு முடிவடைவதில் வியப்பு எதுவும் இல்லை. விசுவாசிகளாகிய நமக்கு இந்த வேளையில் போராட்டங்கள் எத்தகையவையாக இருந்தாலும், தேவன் நமக்காக வைத்துள்ள மகிமையுள்ள எதிர்காலம் நமக்காகக் காத்திருக்கிறது என்பதை விசுவாசிகளுக்கு மறுஉறுதிப்படுத்துதலே இவ்வசனப்பகுதியின் இலக்காக உள்ளது. இங்கு செல்வதற்கு என்ன விலை அல்லது தியாகம் கேட்கப் பட்டாலும், இந்த விவரிப்பானது நம்மை இங்கு செல்ல விரும்புபவர்கள் ஆக்குகிறது.*

## *"பரலோகம்" என்றால் என்ன?*

*பரலோகம் என்பது உண்மையிலேயே ஒரு "இடம்" என்பதாக உள்ளதா அல்லது அது இருப்பு பற்றிய மனரீதியான/ஆவிக்குரிய வகையிலான ஒரு நிலையாக உள்ளதா? அது ஒரு இடமாக உள்ளது என்றால், அது எங்குள்ளது? இவைகள் பின்வரும் இரு காரணங்களினால் பதில் அளிக்கச் சுலபமாயிராத கேள்விகளாக உள்ளன: (1) நித்தியத்தில், காலமும் இடமும் இனியும் நிலவாது. ஆகவே பரலோகத்தின் "இடம்" பற்றிப் பேசுதல் எவ்வாறு என்று அறிதல் கடினமாக உள்ளது. (2) பரலோகத்தைப் பற்றிப் பேசும் நமது புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் யாவும் மிக உயர்வான உருவக மொழிநடையிலேயே பேசுகின்றன. நமது புரிந்துகொள்ளும் இயல்புக்கு அப்பால் அல்லது நமது கற்பனைக்கு அப்பால் உள்ள சிலவற்றைப் பற்றி நமக்குத் தேவன் வேறு எவ்வகையில் விவரிக்கக்கூடும்? வேதவசனங்கள் இவ்வளவு உருவக நடையில் இருப்பதால், நாம் நேரடி அர்த்தமாக எடுத்துக் கொள்ள வேண்டியவைகளும் எடுத்துக்கொள்ளக் கூடாதவைகளும் எவை என்று அறிதல் கடினமாக உள்ளது.*

*இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்களில் ஒரு சத்தியம் மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளது: நாம் பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனாகிய இயேசு ஆகியோரின் பிரசன்னத்தில் என்றென்றைக்கும் இருக்கும்படிக்குப் பரலோகம் செல்ல விரும்புகிறோம். வெளிப்படுத்தின விசேஷம் 21:3ல் யோவான், "இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார் ... தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" என்று பரலோகத்தில் இருந்து கூறிய பெருங்குரல் ஒன்றைத் தாம் கேட்டதாக அறிக்கை செய்தார். இதுவே பரலோகத்தை இவ்வளவு மகிமை உள்ளதாக்குகிறது: நம்மைப் படைத்தவரும் நம்மை மீட்டவருமாகிய அவரது பிரசன்னத்தில் நாம் இருத்தல்.*

*"புதிய எருசலேம்" என்பது பரிசுத்த நகரமாக இருந்தபோதிலும், அங்கு யோவான் தேவாலயம் எதையும் காணவில்லை; ஏனெனில் "சர்வவல் லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை; தேவனுடைய மகிமையே அதைப் பிரகாசிப்பித்தது, ஆட்டுகுட்டியானவரே அதற்கு விளக்கு" (21:22, 23). பிற்பாடு 22:3-5ல் யோவான், பரிசுத்த நகரத்தில் தேவனுடைய ஊழியக்காரர்கள் அவரை சேவித்து, அவரது முகத்தைத் தரிசித்து, அவரது நாமத்தைத் தங்கள் நெற்றிகளில் (உரிமையாளரின் அடையாளமாக) எழுதப் பெற்றிருப்பார்கள் என்று கூறினார். அவரே அவர்களுக்கு வெளிச்சமாயிருப்பார். "பரலோகம்" என்பது நம்மைப் படைத்த தேவனுடனும் நம்மை இரட்சிப்பதற்காக மரித்த கிறிஸ்துவுடனும் என்றென்றைக்கும் இருத்தலாக உள்ளது.*

*யோவான் 14:1-3ல் இயேசு, பரலோகத்தை "என் பிதாவின் வீடு" என்று அழைத்தார். இது நமது நித்திய இல்லத்தைப் பற்றி நினைத்துப் பார்க்க எவ்வளவு விருப்பமான வழியாக உள்ளது! அந்த வீட்டில் இயேசு நமக்காக அறைகளை ஆயத்தப்படுத்தி இருப்பதாகக் கூறினார். ஒருநாளிலே அவர் நம்மை அழைத்துச் செல்வதற்காகத் திரும்ப வருவார். மத்தேயு 8:11ம் வசனமானது, பரலோகத்தைப் பற்றி விவரிக்க ஒரு விருந்தின் உருவகத்தைப் பயன்படுத்துகிறது. இது காலங்கள் தோறும் வாழ்ந்து மரித்த, விசுவாசத்தில் குறிப்பிடத்தக்க மாபெரும் நபர்களின் தோழமையில் இனிவரும் வாழ்வில் அவர்களுடன் ஒரு உணவுமேஜையில் அமர்ந்திருத்தல் என்ற ஆசீர்வாதமான நிகழ்வு பற்றிய யூதக் கருத்தைப் பிரதிபலிக்கிறது. மேலும் இயேசு கடைசி இராப்போஜனத்தின்போது தமது சீஷர்களிடத்தில் "இதுமுதல் இந்தத் திராட்சப் பழரசத்தை நலமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் இராஜ்யத்தில் நான் பானம்பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று" (மத்தேயு 26:29) கூறியபோது இந்தக் கருத்தையே அவரும் பிரதிபலித்தார். இந்தக் கருத்தில் "பரலோகம்" என்பது இயேசுவுடன் பரலோகரீதியான ஒரு மேஜையைச் சுற்றி அமர்ந்து தேவனுடைய உபசரிப்பை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பதை அர்த்தப்படுத்துகிறது. இவ்விரு உருவகங்களுமே - பிதாவின் வீட்டில் இருத்தல் மற்றும் பரலோகத்திற்குரிய ஒரு மேஜையைச் சுற்றிலும் அமர்ந்திருத்தல் ஆகியவை - தேவனுடைய பிரசன்னத்தில் என்றென்றைக்கும் இருத்தல் பற்றிய அழகுநிறைந்த சொல்வெளிப்பாடுகளாக உள்ளன.*

# பரலோகம் எதைப் போன்று உள்ளது?

பிரபலமான இன்னொரு கேள்வி, பரலோகத்தின் இயல்பு பற்றிக் கவலைப்படுகிறது. பரலோகம் பற்றிய வேதாகம வசனப் பகுதிகளின் ஒரு ஆய்வுகூட நமது தகவல்களில் நீண்ட இடைவெளிகளைக் கொண்டதாக விட்டு வைக்கின்றன. "பரலோகத்தில் நாம் ஒருவர் மற்றவரை அறிவோமா?"; "இப்போது நாம் காணப்படுகிறபடியே அப்போதும் நாம் காணப்படுவோமா?" இவற்றிற்கான பதில்கள் நமக்கு மறுக்கப் பட்டிருந்தாலும்கூட, இப்படிப்பட்ட விஷயங்களைப் பற்றி நாம் இயல்பாகவே ஆர்வம் கொண்டுள்ளோம். பரலோகம் எதைப்போன்று இருக்கும் என்று சில திட்டவட்டமான கூற்றுக்களை நாம் ஏற்படுத்தக் கூடும்படிக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 21 மற்றும் 22ம் அதிகாரங்கள் குறைந்த பட்சம் போதுமான விவரிப்பை நமக்குத் தருகின்றன.

*முதலாவது, பரலோகம் என்பது இங்கு நாம் அறிந்துள்ள வாழ்வில் இருந்து வேறுபட்டிருக்கும்.* பரலோகம் என்பது விஷயங்களின் முற்றிலும் புதிதான முறைமையினால் பண்புப்படுத்தப் பட்டிருக்கும்; பூமிக்குரிய விதிகள் அங்கு நடைமுறைப்படாது; "புதிய வானத்தையும் புதிய பூமியையும்" என்று விவரித்தலைக் கொண்டு, யோவான் தமது தரிசனத்தை எடுத்துரைத்தலைத் தொடங்கினார் (21:1). "புதிய" என்பதற்கு கிரேக்க மொழியில் இரு வார்த்தைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, *chronos* (இதில் இருந்தே நாம் "chronological" என்ற வார்த்தைகள் பெறுகிறோம்) என்பது "காலத்தைப் பொறுத்த மட்டில் புதியது" என்று அர்த்தப்படுகிறது - இது ஒரே விஷயத்தின் மிகசமீபத்திய பதிப்பு என்பதாக உள்ளது. இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள இன்னொரு வார்த்தையான *kainos* என்பது முற்றிலும் புதிய வகையான சிலவற்றைக் குறிக்கிறது - இது ஒரே விஷயத்தின் புதிய பதிப்பை அல்ல ஆனால் புதிய வகையிலான வானத்தையும் பூமியையும் குறிக்கிறது. இது யோவான் கூறிய விஷயங்கள் இந்தப் புதிய முறைமையின் பாகமாக இராது என்ற கூற்றினால் மேலும் வலியுறுத்தப்படுகிறது. "அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின" (21:4). இப்போது நாம், நமது வருத்தத்திற்கும் வேதனைக்கும் காரணமான விஷயங்கள் இல்லாது ஒழிந்து போன ஒரு இருப்பு என்று மாத்திரமே அதைக் கற்பனை செய்ய முடியும்!

ஒரு முறை நான், மிகச்சிறு பையனாக இருந்த வேளையில், எனது பாட்டியார் வேதாகமம் வாசித்துக் கொண்டிருந்தபோது, நான் அவர்களின் காலடியில் விளையாடிக் கொண்டிருந்தது நினைவுக்கு வருகிறது. அந்த வேளையில் அவர்கள் வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்து வாசித்துக் கொண்டிருந்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. திடீரென்று அவர்களின் முகத்தில் கண்ணீர் வழிந்தோடியதை நான் கவனித்தேன். பயந்துபோன நான் அவர்களின் பக்கமாகச் சென்று என்ன நடந்தது என்று கேட்டேன். "ஒன்றுமில்லை, நான் பரலோகத்தைப் பற்றி வாசித்துக் கொண்டிருந்தேன், அங்கு செல்ல இனியும் என்னால் காத்திருக்க இயலாது" என்று கூறினார்கள். அது எதை அர்த்தப்படுத்தியது என்று அப்போது என்னால் புரிந்துகொள்ள இயலவில்லை, ஆனால் இப்போது அது எனக்குப் புரிகிறது. எனது பாட்டியார்

மிகவும் சிரமமான வாழ்வை நடத்திக் கொண்டிருந்தார். அவர்கள் இளம் வயதிலேயே விதவையாக ஆனார்கள், அவர்கள் தமது பிள்ளைகளை மாபெரும் மந்த நிலையின் காலத்தின்போது வளர்த்தார்கள், தமக்கும் தமது குடும்பத்திற்கும் அடிப்படைத் தேவைகளை அளிப்பதற்கு அவர்கள் மிகவும் கடினமாக உழைக்க வேண்டி இருந்தது. மனம் மற்றும் உடல் சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஒரு மகனை அவர்கள் இழந்து போனார்கள். இப்போது அவர்கள் பரலோகத்திற்குச் செல்ல ஏங்கியிருந்ததில் வியப்பு எதுவும் இல்லை! வன்முறையின் பயன், உணவு அல்லது தண்ணீர்க் குறைபாடு, சுகவீனம் பற்றிய அச்சமும், நாம் நேசிக்கிறவர்களுக்கு பிரிவு சொல்லுதல் மற்றும் உடல் அல்லது மனதில் மிகவும் வேதனைப்படுத்தும் வலி ஆகியவை இல்லாத ஒரு இடத்தில் வாழுதல் என்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கும்! அது நிச்சயமாகவே பூமியின் மீது வாழும் வாழ்வில் இருந்து வேறுபட்டிருக்கும்!

இரண்டாவது, பரலோகம் என்பது அழகுநிறைந்ததாக இருக்கும். 21:9-11ல் யோவான், பரிசுத்த நகரம் "தேவனுடைய மகிமையைக் கொண்டிருக்கும்" என்று விவரித்தார். அவர், "அதின் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப் போலவும் இருந்தது" (வசனம் 11) என்று கூறினார். பின்பு அவர் அதன் மிகப்பெரிய சுவர் மற்றும் ஒவ்வொன்றும் தனிப்பட்ட மாபெரும் முத்தினாலான அதன் வாயிற்கதவுகள் (21:18-21) ஆகியவற்றை விபரமாக எடுத்துரைத்தார். அதன் மாபெரும் அஸ்திபாரம் விலையுயர்ந்த கற்களினால் அலங்கரிக்கப் பட்டிருந்து என்றும் அதன் தெருக்கள் "தெளிவுள்ள பளிங்குபோலச்" சுத்தத் தங்கமாக இருந்தன என்றும் அவர் கூறினார்.

இது பரலோகத்தைப் பற்றிய நேரடியான விவரிப்பாக இருப்பதில்லை, ஆனால் அது இதை எவ்வகையிலும் குறைந்த அளவு ஆச்சரியத்துக்கு உரியதாக்குவது இல்லை. இயற்கையின் அழகு நிறைந்த காட்சிகளை இந்த பூமியில் நாம் சித்தரிக்க முடியும், ஆனால் அவை யாவையும், பரலோகத்தில் நாம் காணப்போகும் காட்சியுடன் ஒப்பிடத்தக்கவைகளாக இருப்பதில்லை. இருப்பினும் பரலோகத்தின் உண்மையான அழகு என்பது, அதில் உள்ளது *என்ன* என்பதில் அல்ல, ஆனால் அதில் உள்ளவர் *யார்* என்பதிலேயே காணக்கிடக்கிறது. பரலோகத்தில் நாம் "தேவனுடைய மகிமையில்" தோய்ந்து இருப்போம். இது பல நூற்றாண்டுகளாக விசுவாசிகள் ஏங்கிக்கொண்டுள்ள விஷயமாக உள்ளது. சங்கீதக்காரர் பின்வருமாறு எழுதினார்:

> கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்,
> அதையே நாடுவேன்,
> நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும்,
> அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும்,
> நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம்
> கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4)

"தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24) என்பதால், "கர்த்தரின் அழகு" எதைப்போன்று இருக்கும் என்பதை நாம் கற்பனைசெய்ய மாத்திரமே முடியும், ஆனால் நாம் "அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்" (1 யோவான் 3:2) என்பது தேவனுடைய வசனத்தின் வியப்புக்குரிய

வாக்குத்தத்தமாக உள்ளது. அவரது பிரசன்னம் பரலோகத்தை அசாதாரண அழகுபொருந்திய இடமாக்கும்.

*மூன்றாவது, பரலோகம் பரந்து விரிந்ததாக இருக்கும்.* வெளிப்படுத்தின விசேஷம் 21:15-17 வசனப்பகுதி, பொற்கோல் ஒன்றைப் பயன்படுத்தி தூதர் ஒருவரால் அளக்கப்பட்ட நகரின் அளவீட்டை விவரிக்கிறது. இந்த நடவடிக்கை, யோவானை நகரின் அளவீடுகளில் மனம் ஈர்க்கப்படும் விருப்ப நோக்கம் கொண்டது என்பது தெளிவு. முதலாவதாக, நகரம் கனசதுர வடிவைக் கொண்டது என்பதை நாம் அறிகிறோம்: "அந்த நகரம் சதுரமாயிருந்தது, அதின் அகலமும் நீளமும் சமமாயிருந்தது ... அதின் நீளமும் அகலமும் உயரமும் சமமாயிருந்தது" (21:16). மீண்டுமாக நாம், அடையாளத்துவ வட்டாரத்தில் இருக்கிறோம் என்பது தெளிவு, மற்றும் இந்த வடிவத்திற்குத் திட்டவட்டமான ஒரு நோக்கம் உள்ளது. எருசலேம் தேவாலயத்தில் மகாப்பரிசுத்த ஸ்தலம் - இங்குதான் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது - கனசதுர வடிவில் இருந்தது (1 இராஜாக்கள் 6:20). ஆகவே முழுநிறைவான கனசதுரம் என்பது தேவன் தங்கி இருக்கும் இடத்திற்கு செயல்விளைவான அடையாளமானது, அது இப்போது புதிய எருசலேம் என்பதாக உள்ளது.

என்ன ஒரு கனசதுரம்! அது நீளம், உயரம் மற்றும் அகலம் ஆகியவற்றில் "12,000 ஸ்தாதி"யாக இருந்தது என்று யோவான் விவரித்தார். ஒரு ஸ்தாதி என்பது 600 அடிக்கு மேற்பட்டது என்பதால், இது யோவான் நீளம், அகலம் உயரம் ஆகியவற்றில் 1,400 மைல்களுக்கும் அதிகமான அளவைக் கண்டார் என்று அர்த்தப்படுகிறது! அதன் அளவு உண்மையில் பொருட்படுத்தக் கூடியதாக உள்ளதா? ஆம், பரலோகம் செல்ல விரும்புகிற யாவருக்கும் அங்கு போதிய இடம் உள்ளது என்று இது சுட்டிக்காண்பிப்பதால், இது பொருட்படுத்தக் கூடியதாகவே உள்ளது. இயேசு, "என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு" என்று கூறியுள்ளாரே (யோவான் 14:2அ). மக்களின் சிலர் எப்போதுமே அந்த நித்திய நகரத்தை "சுருக்க" முயற்சி செய்கின்றனர், அவர்கள் ஒருசிலர் மாத்திரமே பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்று வலியுறுத்துகின்றனர். லுக்கா 13:23ம் வசனம், அடையாளம் அறியப்படாத மனிதர் ஒருவர் நடைமுறையில் இருந்து என்பதைக்காட்டிலும் அதிகமாக, வினோத ஆர்வத்தினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு கேள்வியுடன் இயேசுவை அணுகிய வேளையைப் பதிவு செய்துள்ளது: "ஆண்டவரே, இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" அவரது கேள்வியானது, இரட்சிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பற்றி யூதப்போதகர்கள் மத்தியில் நீண்டகாலமாக விவாதிக்கப்பட்ட வாதத்தைப் பிரதிபலித்தது, அந்த மனிதரின் கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிக்கவில்லை, ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 21ம் அதிகாரம் திட்டவட்டமாக "இல்லை!" என்று பதில் அளிக்கிறது. அதற்கு நேர்மாறாக, பலர் இரட்சிக்கப்படுவார்கள்!

"ஆனால், மத்தேயு 7:13, 14ஐப் பற்றிய விஷயம் என்ன? இயேசு 'இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்' " என்று சிலர் கேட்கலாம். ஒருசிலர் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தவில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்; மாறாக, இழந்து போகப்படுபவர்களின்

எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது, இரட்சிக்கப்படுபவர்கள் "சிலராக" இருப்பார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 7:9, 10ம் வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:

> இவைகளுக்குப்பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: "இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக" என்று ஆர்ப்பரித்தார்கள்.

சந்தர்ப்பப் பொருளில் இருந்து, எண்ணிக்கையற்ற இந்த மக்கள் கூட்டம், எல்லாக் காலங்களிலும் இரட்சிக்கப்பட்டவர்களை, எல்லா மக்களினம் மற்றும் மொழியில் இருந்து ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினால் மீட்கப்பட்டுள்ளவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது தெளிவு, பரலோகம் என்பது இவர்கள் எல்லாருக்கும் இடம் அளிப்பதற்கு மிகப்பெரியதாக இருக்க வேண்டும்!

"இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலபேர்தானோ?" என்ற கேள்விக்கு இயேசு நேரடியாகப் பதில் அளிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர், தம்மைக் கேள்வி கேட்டவருக்கு, அதைக் காட்டிலும் மிகவும் முக்கியமான விஷயத்தைச் சுட்டிக்காண்பித்தார்: அவர்கள் சிலராக இருந்தாலும் அல்லது பலராக இருந்தாலும், கேள்வி கேட்ட *அந்த நபர்* அவர்களில் ஒருவராக இருப்பாரா? "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகைதேடினாலும் அவர்களாலே கூடாமற்போகும்" என்று இயேசு கூறினார் (லுக்கா 13:24). முடிவில், எத்தனை பேர் பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்பது பொருட்படுத்தப்படாது. இரட்சிக்கப்பட்டவர்கள் மத்தியில் நாம் ஒவ்வொருவரும் இருப்போமா என்பதே உண்மையில் பொருட்படுத்தக் கூடியதாக உள்ளது. நமக்கு அங்கு ஏராளமான இடம் உள்ளது என்று நாம் உறுதியாக இருக்க முடியும். "இடம் இல்லை" என்ற பெயர்ப்பலகையைக் கொண்டு எவரொருவரும் பரலோகத்தில் இருந்து திருப்பி அனுப்பப்பட மாட்டார்.

*நான்காவது, பரலோகம் பாதுகாப்பானதாக இருக்கும்.* இந்தப் பாதுகாப்பைப் பற்றிய பல குறிப்புகளை நாம் வெளிப்படுத்தின விசேஷம் 21ல் கண்டறிகிறோம். உதாரணமாக, பரலோகத்தில் உள்ளவர்கள் "அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்பவரைத் தங்கள் தேவனாகக் கொண்டிருப்பார்கள் என்று 6 மற்றும் 7ம் வசனங்கள் வலியுறுத்துகின்றன. அவர் ஜீவ தண்ணீரை விலை எதுவும் வாங்காமல் இலவசமாகக் கொடுப்பார். பாதுகாப்பின் இந்தக் கருத்தை மேலும் வலியுறுத்துவதற்கு, புதிய எருசலேம் "பெரிதும் உயரமுமான சுவரால்" சுற்றிச் சூழப்பட்டிருக்கும் என்று 12ம் வசனமும், இந்தச் சுவரானது "144 முழங்கள்" கனமுள்ளதாக இருக்கும் (காண்க ESV) என்று 17ம் வசனமும் கூறுகின்றன! பழங்கால நகரங்கள் யாவும்

தங்கள் பாதுகாப்பின் முதல் வரிசையாக சுவர்களைக் கொண்டிருந்தன. கைக்குக் கைச் சண்டை என்பது சாதாரணமானதாக இருந்த அந்தக் காலத்தில், சுவர் என்பது வெளியில் இருப்போர் ஊடுருவுதலைச் செயல்விளைவில் தடைசெய்யும் சாதனமாக இருந்தது. அபாயகால கட்டங்களில், நாட்டுப் புறங்களிலும் கிராமங்களிலும் வாழ்ந்தவர்கள் நகருக்குத் தப்பி ஓடுவார்கள்; பின்பு அதன் வாசல்கள் மூடப்படும்.

புதிய எருசலேம் நகரமும் அதன் சுவர்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது, ஆனால் அதைப் பற்றிய தனிச்சிறப்பான விஷயம் ஒன்றுள்ளது. அது பன்னிரெண்டு வாசல்களைக் கொண்டு இருந்தாலும், அந்த வாசல்கள் ஒருக்காலும் மூடப்பட்டு இருப்பதில்லை (வசனம் 25). சாதாரணமாக ஒரு நகரத்தின் வாசலானது, போக்கு வரத்தை அனுமதிப்பதற்காகப் பகல் வேளையில் திறந்து வைக்கப் பட்டிருக்கும். இரவு வேளைகளில் படையெடுப்பிற்கு எதிராகப் பாதுகாப்பை அளிப்பதற்காக அந்த வாசல்கள் மூடப்பட்டுக் காவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருப்பார்கள். இதற்கு நேர்மாறாகப் புதிய எருசலேமில், வாசல்கள் பகலில் ஒருக்காலும் மூடப்படுவதில்லை, மற்றும் அங்கு இரவு வேளை இருப்பதே இல்லை. ஏன்? தேவனுடைய மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய பிரசன்னம் அங்கு இருப்பதால் இரவு வேளையே இருப்பதில்லை (வசனங்கள் 23, 24). புதிய எருசலேமின் பாதுகாப்பு முற்றானதாக உள்ளது.

பாதுகாப்பு என்பது பலருக்கு இன்றைய நாட்களில் முதன்மையான கவலையாக உள்ளது, குறிப்பாக பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் உயிரியல்ரீதியான கவலையாக உள்ளது, குறிப்பாக பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல்கள் மற்றும் உயிரியல்ரீயான அல்லது அணுக்கரு ரீதியான பேரழிவுகளினால், இது (பாதுகாப்பு) குறிப்பாகக் கவலைக்குரிய விஷயமாக உள்ளது. மக்கள் விமான நிலையங்களில் பாதுகாப்பு பற்றி, குற்றங்களுக்கு எதிராகத் தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளுதல் பற்றி மற்றும் தங்கள் வேலைகளின் பாதுகாப்புப் பற்றி கவலை கொண்டு இருக்கின்றனர். பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் கவனம் நிறைந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் - மற்றும் சிலர் பெரிய தொகைகளை முதலீடு செய்கின்றனர்; இருப்பினும் நாம் முற்றிலுமான பாதுகாப்பு என்ற நிலையை ஒருக்காலும் அடைவதில்லை. நாம் புதிய எருசலேமை அடையும் வரையில் இது (முற்றிலுமான பாதுகாப்பு) நடக்க முடியாது. அங்கு நாம் பெரிதும் உயரமுமான சுவரால் சூழப்பட்டுள்ள ஒரு நகரத்தில் இருப்போம், அதன் வாசல்கள் ஒருக்காலும் மூடப்பட்டு இருப்பதில்லை. சகலப் படைப்புகளின் தேவனாலும் நாம் அங்கிருப்பதை நமக்குச் சாத்தியமாக்க மரித்த ஆட்டுக்குட்டியானவராலும் நாம் பாதுகாக்கப்பட்ட நமக்கு வேண்டியவைகள் அளிக்கப்பட்ட நிலையில் இருப்போம். இதைக்காட்டிலும் அதிகமாக ஒருவர் எதைக் கேட்க முடியும்?

*ஐந்தாவது, பரலோகம் முழுமையானதாக இருக்கும்* வெளிப்படுத்தின விசேஷம் 22:1-5ல் நகரத்தின் உருவகம் ஒரு தோட்டத்தின் உருவகத்துடன் ஒன்று கலக்கப்பட்டுள்ளது - ஆனால் அது ஏதோ ஒரு தோட்டமாக இருப்பதில்லை. இந்த தோட்டத்தில் "ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி"யும் மக்களினங்களைக் குணமாக்குவதற்காக "ஜீவவிருட்சம்" என்னும் மரமும் உள்ளன. "இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும்

*இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும். அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வசனங்கள் 3-5). இது நன்கு பழக்கப்பட்டதாக ஒலிக்கிறதா? 1 முதல் 5 வரையிலான வசனங்கள், ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்ட பாவத்தில் "விழுதல்" என்பதன் திருப்புகையை விவரிக்கின்றன. அந்தத் தோட்டத்தில் மனிதன் தேவனுடனான தனது நெருங்கிய உறவை, தனது பாதுகாப்பை மற்றும் ஜீவ விருட்சத்திற்குச் செல்லும் வழியை இழந்தான். சர்ப்பத்தின் மீதும், மனிதன் மீதும் பெண்ணின் மீதும் மற்றும் பூமியின் மீதும் கூட"சாபங்கள்" உச்சரிக்கப்பட்டன. புதிய எருசலேமில் இவையாவையும் திருப்பப்படும். ஆதியாகமம் 3ல் நாம், "இழந்துபோகப்பட்ட பரதீசு" பற்றி வாசிக்கிறோம், மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 22ல் நாம், "மீண்டும் ஆதாயப்படுத்திக்கொள்ளப்பட்ட பரதீசு" பற்றி வாசிக்கிறோம்.*

*பரலோகத்தில் நாம், தேவனுடன் முழுமையான, முறிபடாத உறவை, நமது பாவங்களுக்கான மன்னிப்பை மற்றும் முற்றிலுமான குணமாக்குதலை மகிழ்வுடன் அனுபவிப்போம். தேவன் எல்லாவற்றையும் அவற்றிற்குரிய இடத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார் - அதாவது தம்மிடத்திற்குத் திரும்பக் கொண்டுவருவார். அது நம்மையும் உள்ளடக்குகிறது!*

## *யார் அங்கிருப்பார்கள்?*

*பரலோகத்தைப் பற்றி இப்படி ஒரு விரிவான விவரிப்பைக் கண்டுள்ள நிலையில் நாம், "யாரால் அங்கு போக இயலும்?" என்று கேட்டாக வேண்டும். புதிய எருசலேமில் வாழ்ந்து தேவனுடன் முறிவுபடாத உறவை அதாவது நித்தியத்தின் மாபெரும் ஆசீர்வாதத்தை மகிழ்வுடன் அனுபவித்தல் என்ற மாபெரும் சிலாக்கியம் யாருக்குத் தரப்படும்?*

*ஒவ்வொருவரும் பரலோகம் செல்ல முடியும் - ஆனால் ஒவ்வொருவரும் செல்ல மாட்டார்கள் - என்பதே பதிலாக உள்ளது. "பரலோகம் என்பது, தயாராக உள்ள மக்களுக்காகத் தயார் செய்யப்பட்ட இடமாக உள்ளது" என்று அடிக்கடி கூறப்பட்டுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பரலோகம் செல்லுதல் என்பது தற்செயலாகவோ அல்லது தானாகவோ நடைபெறுவதில்லை. அது அங்கு செல்வதன் மீது தங்கள் பார்வைகளைப் பதித்து வைத்து அந்த நித்திய இலக்கை அடையும் தங்கள் வழிகளில் ஏதொன்றும் குறுக்கிட அனுமதிக்காமல் இருப்பவர்களுக்கானதாக உள்ளது. நாம் எவ்வாறு "தயாராக" வேண்டும்? ஆட்டுக்குட்டியானவரான இயேசுவைப் பின்பற்றுவதன் மூலமாக, அவரைப் பின்பற்றுதல் மூலமாக மாத்திரமே நாம் தயாராக முடியும்.*

*பரலோகம் ஒரு உண்மை நிலையாக இருப்பதைப் போன்றே, நரகமும் ஒரு உண்மை நிலையாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி இரு அதிகாரங்களில் யோவான் இதைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை, ஆனால் (இப்புத்தகத்தின் பிற அதிகாரங்களில்) அவர் இதைப் பலமுறை குறிப்பிட்டார். கிறிஸ்தவம் என்பது "உலகத்தில் உள்ள எல்லாரையும் கொண்டிருக்கும்" மார்க்கம் அல்ல; ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று வேதாகமம் கூறுவதில்லை. இயேசு அளிப்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் யாவரும் நித்தியத்திற்கும் தேவனைவிட்டுப் பிரிக்கப் பட்டிருப்பார்கள் என்பதே வெளிப்படுத்தின விசேஷத்தின் - மற்றும் புதிய ஏற்பாட்டின் எஞ்சிய பகுதியின்*

போதனையாக உள்ளது. யோவான் பின்வருமாறு எழுதினார்:

> பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் (21:8).

> தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (21:27).

> ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள். நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும் பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள் (22:14, 15).

> இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார் (22:18, 19).

இந்த வசனங்கள், பரலோகத்தில் இரப்போகாத மக்களின் வகை பற்றிய உதாரணங்களைத் தருகின்றன- இவை துன்மார்க்கத்தில் வாழ்வோரை எச்சரிப்பதற்கும் ஆட்டுக்குட்டியானவரைப் பின்பற்றுவோரை உற்சாகப்படுத்துவதற்குமான வசனங்களாக உள்ளன. இந்த வாழ்க்கையைப் போல் இன்றி, பரலோகம் என்பது தேவபக்தியற்ற மக்களின் இருப்பினால் மாசுபடுத்தப்பட்டிராது.

நம்மில் ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டிய விருப்பத் தேர்வு ஒன்றைக் கொண்டுள்ளோம். நாம் கிறிஸ்துவுக்கென்று நம்மை அர்ப்பணித்து பரலோகத்தின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதா அல்லது நமது பாவங்களுக்காக அவர் பலியானதைப் புறக்கணித்து தேவனுடைய பிரசன்னத்தில் இருந்து என்றென்றைக்கும் விலக்கப்பட்டு இருப்பதா என்பதை நாம் முடிவுசெய்தாக வேண்டும்.

“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்; கேட்கிறவனும் வா என்பானாக; தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்; விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்” (22:17). தேவன் நித்திய வாழ்விற்குத் திறவையான அழைப்பிதழை அளிக்கிறார், மற்றும் அதை ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பதை நாமே தீர்மானிக்க வேண்டும். இந்த

வாழ்வில் அதற்கு நாம் என்ன விலை கொடுக்க வேண்டி இருந்தாலும் சரி, அது அந்த விலைகொடுக்கத் தகுதியானதாகவே இருக்கும். அதன்மீது நாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொண்டிருக்கிறோம்.

---

## கடைசிக்காலத்தை நம்மால் முன்னுரைக்க முடியுமா?

வேதாகமத்தின் மாணவர்கள் அடிக்கடி, மத்தேயு 24 மற்றும் அதன் இணைவசனங்களை (மாற்கு 13; லூக்கா 21) வாசித்து, உலகத்தின் முடிவை முன்னுரைக்கக் கூடிய வகையில் இயேசு "அடையாளங்களை" அளித்தார் என்று முடிவு செய்கின்றனர். (வேதாகமத்தின் சில பதிப்புகள்கூட மத்தேயு 24ம் அதிகாரத்தின் தொடக்கத்தில் "உலகத்தின் முடிவின் அடையாளங்கள்" என்ற தலைப்புடன் தொடங்குகின்றன.) இருப்பினும் இயேசுவின் வருகை பற்றி எவரொருவரும் முன்னுரைக்க இயலாது என்ற இயேசு கூறிய கூற்றின் கண்ணோக்கில் (மத்தேயு 24:36), இது ஒரு தவறான குறிப்பு என்பது தெளிவாகிறது. குறைந்த பட்சம் இது இந்த அதிகாரம் முழுவதற்குமான தலைப்பாக இருப்பதில்லை என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் மத்தேயு 24ம் அதிகாரத்தைக் கவனநிறைவுடன் வாசித்தலானது, முதலில் இயேசு, *தேவாலயம் அழிக்கப்படுதல்* பற்றித் தமது சீஷர்களால் முன்வைக்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்தார் என்று காண்பிக்கின்றன. மேலும் அவர்கள், "உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?" என்றும் கேட்டனர் (வசனம் 3). வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், மாறுபட்ட இரு கேள்விகள் கேட்கப்பட்டுப் பதில் அளிக்கப்பட்டன. இயேசு தமது வருகையை முன்னறிவிக்க முயற்சி செய்பவர்களுக்கு எதிராகத் தமது சீஷர்களை எச்சரித்தார், அப்போது அவர்கள் "யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும்" கேள்விப்படுவார்கள், ஆனால் அவைகள் வரவிருக்கும் முடிவின் அடையாளங்களாக இருப்பதில்லை என்று உறுதிப்படுத்தினார். (அது 6ம் வசனம் வாசிக்கப்படும் வழக்கமான வழிக்கு எதிர்மாறானதாக உள்ளது.) "பல இடங்களில்" உண்டாகும் "பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும்" கூட (வசனம் 7) "முடிவின் அடையாளங்களாக இருப்பது இல்லை" (வசனம் 6), ஆனால் அவைகள் "வேதனைகளுக்கு ஆரம்பமாக" மாத்திரம் இருக்கின்றன. 15 முதல் 28 வரையிலான வசனங்களில் இயேசு, எருசலேம் நகரம் அழிவுக்கு மேல் அழிவை அனுபவிக்கவேண்டி இருந்தாலும், இந்த நிகழ்வுகள் அவரது உடனடியான வருகைக்கான அடையாளங்கள் என்ற வகையில் கிறிஸ்தவர்கள் விளக்கக் கூடாது என்று மறுபடியும் வலியுறுத்தினார்.

29ம் வசனத்தில் இருந்து அவர், எருசலேமின் வீழ்ச்சி பற்றிய இந்தக் கலந்துரையாடலில் உலகத்தின் முடிவு பற்றிய சில விளக்கங்களை ஒன்றுகலக்கத் தொடங்கினார். இருப்பினும் அவர், தாமோ அல்லது பரலோகத்தில் உள்ள தூதர்களோ கூட, அந்த மகாப்பெரிய நாளின் வேளையை அறிவதில்லை என்றும் கூடுதலாகக் கூறினார். முடிவு எப்போது வரும் என்பதை முன்னுரைப்பதற்காக வேதவாக்கியங்களை ஆராய்தல் நமது பொறுப்பாக இருப்பதில்லை, ஆனால் அந்த நாள் வரும் வரையில் - என்ன நடந்தாலும் - தேவபக்தியுள்ளவர்களாக வாழ்ந்திருந்து அந்த நாளுக்காகத் தயாராக இருத்தல் என்பதே நமது பொறுப்பாக உள்ளது (24:44-25:46). இதே வலியுறுத்தம் 1 தெசலோனிக்கேயர் 5:1-11லும் காணப்படுகிறது.

# இறந்தவர்கள் எங்கே இருக்கின்றனர்?

*"நாம் இறக்கும்போது நமக்கு என்ன நடக்கிறது?" என்பது அதிகம் விவாதிக்கப்படும் ஒரு கேள்வியாக உள்ளது. (விசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் என்ற வகையில்) நாம் இறக்கும்போது, நேரடியாகப் பரலோகம் செல்வோமோ அல்லது உயிர்த்தெழுதலுக்காகக் காத்திருப்பதற்கென்று ஏதோ ஒரு வகையிலான "இடைப்பட்ட இடம்" ஒன்று உள்ளதா? பரலோகம் பற்றிய வேதாகமரீதியான வசனங்களின் உருவக இயல்பானது இதற்கு மிகச்சரியாகப் பதில் அளிப்பதைச் சிரமமாக்குகிறது.*

*இருப்பினும், உருவக மொழிநடை பயன்படுத்தப்பட்டிராத ஒரு வசனப் பகுதியானது, நாம் நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்வோம் என்று சுட்டிக்காண்பிப்பதாகக் காணப்படுகிறது. பிலிப்பியருக்குப் பவுல் எழுதியபோது, அவர் தமது அப்போஸ்தல ஊழியத்தை நிறைவேற்றுவதற்கு மாம்சத்தில் தரித்திருத்தல் மற்றும் மரணத்தின் மூலமாக நித்திய வாழ்விற்குள் கடந்து செல்லுதல் என்ற இரு சாத்தியக்கூறுகளுக்கு இடையில் கிழிக்கப் பட்டிருந்தார். "ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்" என்று அவர் கூறினார். பின்பு அவர் "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" என்ற தமது விருப்பத்தைக் கூடுதலாகக் கூறினார் (பிலிப்பியர் 1:23). மரணமானது கிறிஸ்தவரை நேரடியாகக் கர்த்தருடைய சமூகத்தில் கொண்டு சென்று நிறுத்துகிறது என்று பவுல் நம்பினார் என்பது உறுதி. "பரலோகம்" என்பது வேறு எதை அர்த்தப்படுத்தினாலும், அது வேறு எதைக் காட்டிலும் அதிக நன்மையாக உள்ளதான, கிறிஸ்துவுடன் இருத்தல் என்பதை திட்டவட்டமாக அர்த்தப்படுத்துகிறது.*

*பவுலின் கூற்றானது, மனந்திரும்பிய கள்ளன், இயேசு அவரது இராஜ்யத்தில் வரும்போது தன்னை "நினைத்தருளும்படி" கேட்டுக்கொண்டபோது அவனுக்கு அவர் பதிலுடன் நேர்த்தியாகப் பொருந்துகிறது: "... இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிப்பாய்" (லூக்கா 23:42, 43). மீண்டுமாக, நித்தியத்தில் ஆசீர்வதிக்கப்பட்டிருத்தல் என்பது கர்த்தருடைய பிரசன்னத்தில் இருத்தலாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட இடம் என்பதல்ல, ஆனால் எங்கிருந்தாலும் அல்லது என்ன நடந்தாலும், நாம் நம்மைப் படைத்தவர் மற்றும் நமது மீட்பர் ஆகியோருடன் இருத்தல் என்பதே நமது இலக்காக உள்ளது. அவருடன் என்றென்றைக்கும் இருத்தல் என்பதே போதுமானதாக இருக்கும்.*